தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1979 பிப்ரவரி 22-ம் நாள்.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கோவில்பட்டி ஜி.வி.என். கல்லூரி

* குறுகிய கால வினா எண். 1. திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவில்பட்டி, ஜி.வி.என் கல்லூரியை ஜனவரி முதல் வாரத்திலிருந்து நிர்வாகம் மூடி விட்டதால் சுமார் 1,000 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் மேற்படி கல்லூரியைத் திறக்க எடுக்கப் பெற்ற நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) ஆம்.

(ஆ) இது குறித்து அரசு கவனம் செலுத்தி வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரி ஜனவரி மாதத்திலிருந்து ஏறக்குறைய 2 மாதங்களாக மூடப்பட்டிருக்கிறது. அங்கே செமஸ்டர் முறையிலே பரீட்சைகள் இருப்பதன் காரணமாக அந்த மாணவர்கள் பாடங்களைப் படிக்கமுடியாமல் கஷ்டப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அதற்குப் பிரதானமான காரணம் அந்த மாணவர்கள் தமிழகத்திலே வேறு எங்கும் இல்லாத அளவிற்கு விடுதிக் கட்டணம் அந்த நிர்வாகம் வசூலிக்கிறது என்றும்

அவர்கள் சாப்பிடக்கூடிய தட்டுக்களுக்கு தினமும் 10 பைசா வீதம் மாதம் 3 ரூபாய் பல வருடங்களாக அவர்கள் வசூலிக்கிறார்கள் அதை நிறுத்தவேண்டுமென்றும் அவர்கள் கேட்டதற்காக அப்படிக் கேட்ட மாணவர்களை விடுதியிலிருந்து விலக்கியிருக்கிறார்கள். அப்படி விலக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்றும் அந்த மாணவர்கள் கேட்ட காரணத்திற்காக அந்தக் கல்லூரியை மூடியிருக்கிறார்கள். அதனால் மாணவர்களுடைய படிப்பு பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த நிர்வாகம் கல்லூரியைத் திறக்கச் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா அல்லது அரசாங்கமே அந்தக் கல்லூரியை ஏற்று நடத்தத் தயாராக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்கள் நடவடிக்கைகளை குறித்து கல்லூரி முதல்வரால் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையென்றும் அந்தக் கல்லூரியின் சூழ்நிலை வகுப்புகளை நடத்த ஏற்புடையதாக இல்லையென்றும் மாவட்ட அதிகாரி தெரிவித்திருக்கிறார். அந்தத் துணை ஆய்வாளர் அதைப்பற்றி ஆய்ந்து அறிந்து அறிக்கையை அரசுக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளார்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரியின் நிர்வாகத்திற்கும் அந்த முதல்வருக்கும் அவர்களுக்குள்ளேயே தகராறுகள் இருக்கின்றன, அந்தக் காரணத்தினாலே அந்த நிர்வாகம் அந்த முதல்வரை நீக்கவேண்டும் என்பதற்காக நிர்வாகம் அந்தக் கல்லூரியை மூடியிருக்கிறது. ஆகவே, நிர்வாகத்திடம் கடுமையாகக் கண்டித்துச் சொல்லி அந்தக் கல்லூரியை அரசு திறக்கச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அந்த நிர்வாகத்தைக் கட்டுப்படுத்த இடைக்காலத்திலேயாவது அந்தக் கல்லூரியை அரசு எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அறிக்கை கிடைத்தவுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். நேரம் இல்லாத காரணத்தால் அந்தந்தத் தொகுதிகள் சம்பந்தப்பட்ட கேள்விகளை அந்த அந்த உறுப்பினர்கள் மட்டும் கேட்டால் போதும். பொதுப்படையான நோக்கமுள்ள கேள்வியாக இருந்தால் எல்லோருக்கும் கேட்பதற்கு வாய்ப்புரிமை உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

1979 பிப்ரவரி 22]

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, ஒருவேண்டுகோள். இன்றைக்கு 15 முதல் 20 கேள்விகள் கொடுக்கப்படுகின்றன. 40 கேள்விகள் கூட எடுத்துக் கொள்ள முடியும். எப்படியென்றால் யார் கேள்வியைக் கேட்டு இருக்கிறார்களோ அவர்கள் 4, 5 உப கேள்விகளைக் கேட்கின்ற முறையைக் கொண்டுவந்தால். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசிய போது கேள்வி கொடுத்த உறுப்பினர் இரண்டு முறைகள் கேட்டால் போதும் என்று முடிவெடுத்து இருக்கிறோம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நான் சொல்வது, கேள்வி கேட்ட உறுப்பினருக்கு 4, 5 உப கேள்விகள் கேட்க வாய்ப்புக் கொடுப்பதன் மூலமாக 30, 40 கேள்விகள் கூட ஒரு நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை கனிவாக நியாயமாக இருந்தாலும்கூட அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுக்கப்பட்ட முடிவுப்படி கேள்விகளை எடுத்துக்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுறேன்.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகம்.

குறுகிய கால வினா எண். 2. திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக தலைமை நிலையத்தை நாகர்கோவிலிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றுகின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கின்றதா ?

(ஆ) அதனை நாகர்கோவிலிலேயே நிரந்தரமாக வைத்திருப்பதற்கு அரசு நிரந்தர வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை.

(ஆ) ஆம்.